
டி. ஆர். மகாலிங்கம், குமாரி ருக்மணி,
டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர் நடித்த



ப்ரகதி

# ஸ்ரீ வள்ளி

## வடுவூராரின்

# நவரசம் ததும்பும் நாவல்கள்

| | | |
|---|---|---|
| பூஞ்சோலையம்மாள் | ... | 2—0—0 |
| முத்துலக்ஷ்மி | ... | 2—0—0 |
| நவகைமடவன்னம் | ... | 2—0—0 |
| நீலலோசனி | ... | 2—0—0 |
| தங்கம்மாள் | ... | 2—0—0 |
| நவநீதம் | ... | 2—0—0 |
| டாக்டர் சோணாசலம் | ... | 2—0—0 |
| மிஸ்டர் பூச்சாண்டி எம். ஏ. | ... | 2—0—0 |
| மருங்காபுரி மாயக்கொலை | ... | 2—0—0 |
| சிங்கார சூர்யோதயம் | ... | 2—0—0 |
| துரைராஜா | ... | 2—0—0 |
| ராஜேந்திர மோகனா | ... | 2—0—0 |
| சமய சஞ்சீவி | ... | 2—0—0 |
| பாவாடைச் சாமியார் | ... | 2—0—0 |
| சிவராமகிருஷ்ணன் | ... | 2—0—0 |
| வஸந்தகோகிலம் | ... | 2—0—0 |
| சொக்கன் செட்டி | ... | 2—0—0 |
| கலியாணசுந்தரம் | ... | 2—0—0 |
| பிச்சுமுத்துக்கோனான் | ... | 2—0—0 |
| பச்சைக் காளி | ... | 2—0—0 |
| மாயசுந்தரி | ... | 1—0—0 |

விபரங்களுக்கு:—

**ஸ்ரீமகள் கம்பெனி**
122, வரதாமுத்தியப்பன் தெரு
சென்னை-1

விற்பனை நிலையம்:—

**M. S. ராமுலு கம்பெனி**
286, சைனா பஜார்
சென்னை-1

# ஸ்ரீவள்ளி பாட்டுகள்

—— :O: ——

கோரஸ்] [செஞ்சுருட்டி-ஆதி

அந்த மிகுந்திடு சுந்தர மாநகர் செந்தில் வாழும் வேலா—சீலா
அன்பர் கூடு மானந்தம்—அங்கு—இவர் புகழ் பாடுவார் சந்தம்
வேல் வேல், வடிவேல், வெற்றிப் படைவேல்
வந்து நின்ற பகை கொன்று வென்றவேல்
அமரருடைய இடர் அகலச் சிறைவிடுத்து அபயமளித்தவேல்
அரஹர சிவகுரு ஓம், ஆறுபடை வீடதிலும் முருகா—நித்யம்
அன்பர் மனக் கோயில் வளர் ஆறுமுக அழகா ஓம்

நடனம்] [அடாணு-ஆதி

யார் உந்தனைப்போல் ஆதரிப்பவர் ஆறுமுகத்தரசே . . . (யார்)
பார்புகழும் பழநிமலைமேவியே பரமனே திவ்ய பரஞ்சுடரே (என்)
அல்லல் செய்யும் என் வினையை தீர்த்தீர்
அன்பு கொண்டென்னை வந்து காத்தீர்
பொல்லாச் சூரன் உடலை பேதித்தீர்
புரமெரித்தவன் திருமதலையாய் உதித்தீர் (யார்)

வள்ளி] [மாண்டு-ஆதி

ஐந்து கரனுக்கிளைய ஆறுமுக வேலனையே
செந்தில் குமரனையே—கிளியே
சேர மனம் கோரினேனே

செஞ்சுருட்டி

ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே
பிஞ்சிலே கூடினேன் நான்—கிளியே
பிரியமனம் வல்லையே

சுப்பம்மாள்] [ஸிந்து பைரவி-திச்ரலகு

அத்தான் என்றதுமே—அடங்கா ஆசை உண்டாகுதம்மா
பார்த்தா வாகிடிலோ—தூதுசெல் பச்சைப் பசுங்கிளியே
பக்திக்குகந்தவனை—உள்ளத்தில் புகுந்து கொண்டவனை
நித்தமென் பூமானே—என்றிட நேருமோ சொல்மானே
தூக்கம் பகல் ராவே—அறியேன் தூய வெண் புறுவே
ஏக்கம் தவிர்ப்பதற்கே எனக்கோர் மார்க்கமும் தானில்லையா

**வள்ளி]** **[ஹிந்துஸ்தானிமேட்டு-திச்ரம்**

சோ சோ சோ ஆலோலம் ஆலோலம் ஆலோலம்—ஆ
கொஞ்சுங் கிளி குருவி மைனுவே கூட்டமாய் இங்கே வராதீர்
நவண் வீசி கல்லெறிவேனே காவலில் காணவிடேனே உங்களை
சோ சோ சோ
அழகான பறவைகாள் அறியாதே வந்தீர் காடேகௌதாரி
இனங்காள்
நல்வார்த்தைசொன்னேன் நில்லாதீரிங்கே நானினிமேல்
தாக்ஷண்யம்பாரேன்
ஹா அடிப்பட்டா விறப்பீர் சோ சோ சோ

**வள்ளி]** **[ஹிந்துஸ்தானி மேட்டு-ஆதி**

மயிலே தூது சொல்லாயோ மாது என்மேன் மனமிரங்கி (மயி)
வேல் தாங்கிடுமா முருகோனே - என் கனவிலே மணந்தானே
ஊண் மறந்தே நான் உருகுகின்றேன்
வழி பார்த்து நின்றே விழிநொந்தேன்
இது நேரமிதே நீ அங்கே (என்)
நிலையைப் போய் சொல்லு வாயா (மயி)

இன்னும் தாமதமேன் மனமே இல்லையோ
என்னையே மறந்தார் அவர் இங்கே
என்மேல் யாதோ மனஸ்தாபம் உனக்கென்மேல் யாதோ
மனஸ்தாபம்
உபகாரமிதே உடனேசொல் உன்னையே நான் மறவேனே (மயி)

**நாரதர்]** **[அமீர் கல்யாணி—ஆதி**

பிபரே நாம ரஸம் ரஸனே பிபரே நாம ரஸம்
நாம ரஸம் பிபரே ரஸனே நாம ரஸம் பிபரே

**நாரதர்]** **[கரஹரப்பிரியா-ஆதி**

முருகன் திருமால் மருகன் பெருமை - அந்த
முக்கண்ணனுக்கு மில்லை கழுகாசல (முரு)

இருகாதும் மனதவனைக் கண்டால்
இளகும்படி களிபொங்கிடும் வளரும் திரு தணிகாசல (முரு)

கார்த்திகைப் பெண்கள் ஓராறுபேரும் கண்டு
களிக்க வரும் பாலன்—எதிர்

காணும் கிரவுஞ்ச மாமலை வேறக் கண்ட வடிவேலன்
ஆர்த்த அசுரரை அன்றே கொல்லும் காலன்
ஆடும் மயில் மீதி லாரோகணக் கோலன்
கோர்த்த கடம்ப-மலரணியும் சீலன்
குகனற்றவர் அகமுற்றிடும் புகழ்பெற்றவன் இதழ் கொற்றவன்

சுப்பிரமணியர்] [தேவகாந்தாரி-ஆதி

சம்போ மஹா தேவா சாம்ப சதாசிவா
சந்திர கலா தரா—சர்வ ஜீவாதாரா
அன்பாகவே நானென்றும் உன்பாதம் பணிந்திட
உனது நல்வரம் அருள்வாய்

சுப்பம்மாள்] சங்கராபரணம்-ஆதி

அம்மான் மகனை இனி ஆட்டிவைக்கிறேன் (எங்கள்)
அம்மாதான் சொன்னபடி ஆசையோடு கொஞ்சிப்பேசி-வாட்டும்
சும்மா கரையோரம் கொக்குபோலே இருந்து
காதல் கொண்டு மீன் பிடிப்பேன் கண்வலையாலே
உண்மையின்ன தென்று முகக்குறிப்பாலே - காட்டி
ஒத்துமை யுண்டாக்கிடுவேன் புன்சிரிப்பாலே யோகமே—
தீரும் மோகமே

ஆசையோடு சந்தனத்தைப் பூசுவேன்
விசு - வாசத்தோடு சாமரததால் வீசுவேன்
மாசில்லாத வெத்திலை மடித்துத் தருவேன்
மத்தவ ரில்லாதபோது காலும் பிடிப்பேன்
தூசு தட்டி பஞ்சணை படுக்கைப் போடுவேன்
அவர் - தூங்கிடத் தெம்மாங்கு பாட்டு பாடுவேன்
தாசிபோல் நடந்து இன்பம் தந்து கூடுவேன்
என் சுவாமிக்குத் தகுந்த மலர் மாலை சூடுவேன்

வள்ளி—தோழி] ஹிந்துஸ்தானிமெட்டு-ஆதி

வள் சிங்காரா வேலா சிவசண்முகனே சுகுமாரா
நீங்கா தென்மனக் கோயிலில் வளரும் நிர்மல நித்யானந் [தா
அடியேன் நேசா அன்பா விசுவாசா
ஆதவன் கோடி யுதித்ததுபோல அருளது ஜோதி விலாசா
தோ: வா வா வா இங்கே மயில் மீதினில் ஏறியே வா வா
வள்: வாவாவா கருணாகரனே வா கந்தா சண்முகனே வா
தேவசிங்கார சூரசம்ஹாரா
தோ: ஆவலோடுன்னை அணைத்திடவே நின் தேவியை
மருவிட வா வா

வேடன்] [இராகம்—பைரவி

காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே
மேயாத மான் புள்ளி மேவாத மான்

சந்தம்

1 மேவும் கானடைந்துநறு சந்தனமும் புனுகும் கமழும்
களபங்களணிந்து சுணங்கு படர்ந்து புல் மேயாத மான்

2 கானக் குறவர் கண்மணி எனவளர்
கானக் குயிலை நிகர் குரலுடையது (மேயாதமான்)

3 தேனும் பாகும் தினைமாவும்
தின்பதலாது மென்புல்லொருபோதும் (மேயாதமான்)

ராகம்—காபி

சாயாத கொம்புரெண்டிருந்தாலும் அது தலைநிமிர்ந்து பாயாதமா
மான் வரக் கண்டதுண்டோ - பசும்பொன்போல நன்மேனி [ன்
துலங்கிட புவிதனிலழகிய மான்வரக் கண்டதுண்டோ

கிள்ளி—மெல்லி] [ஹிந்துஸ்தானி மெட்டு-ஆதி

கிள்: கட்டிக் கரும்பே கற்கண்டு முத்தமே
என் கன்னத்தில் ஒண்ணு கொடுத்துடு
கையை விடமாட்டேன் குடுகுடு

மெ: குட்டி ராஜா என்] விரட்டாதே நீ
மானுருவாக மாறியே!—புள்ளி
மாயமாவேன் ஓடியே!—துள்ளி

கிள்: மானுருவாய் நீ மாறினல் புள்ளி
கானின் வேடனுகவே கிள்ளி
உன்னை - கண்ணி வைத்துக் கட்டுவேன்

மெ: கண்ணி வைத்து நீ கட்டினுல் நானுமே
தண்ணீரில் மீனுக மூழ்கியே போவேன்

கிள்: ஆஹா தண்ணீரில் மீனுய் நீ தாவி குதித்தோடினுல்
கொக்காய் வந்து உன்னை நான் கொத்திக்கொண்டு போவேன்

மெ: கொக்காய் வந்து கொத்தவந்தால் பாம்புருவாகி
படமெடுப்பேன் படமெடுத்து நான் ஆடுவேன்

கிள்: பாம்புருவாய் நீ படமெடுத்தால் பிடாரனுக வருவேன்
உன்னை ஆட்டிவைத்து அடக்குவேன்

மெ: எந்தனை சும்மா நீ தொந்தரவு செய்தால்
நான் என் உயிரை விட்டிடுவேன்
அப்ப நீ என்ன செய்வாய்

கிள்: அப்படி நீ உன் உயிரை விட்டால்
இப்படி உக்காந்து நானும் இங்கே

மெ: ஆசை ராஜா அழவேண்டாம் வாவா நீ வாவா
சந்தோஷமாய் நாம் இருப்போமே

கிள்: அப்பக் கன்னத்திலே ஒண்ணு குடுத்திடு

வேடன்] [சுத்தசாவேரி—ரூபகம்

எல்லோரையும் போலவே என்னை எண்ணலாகுமோடி போடி
வல்லமையில் தருக செல்வனென் முன்னே
லாவண்யமுள்ள பெண்ணே கண்யமில்லாமலே
ஜாடைதெரிந்துகொள்ளவேண்டும் தந்திரமாகவேவிள்ளவேண்டும்
நாடி உனைத் தேடி நானே வந்த நன்மை எண்ண வேண்டும்
மோடி ஏனடி பாரினிலே நேரும் பாக்கியம் வெறுக்கத்தகுமோ
முக்கிய மாயுந்தன் கைக்குள் சிந்தாமணி
பொக்கிஷ மென்று நினைக்கவேண்டுமல்லால் (எல்)

வேடன்—வள்ளி] [ஹிந்துஸ்தானி மெட்டு-ஆதி

வே: சிங்கார ரூப அலங்காரி
சினங் கொள்ள லாகுமா நாமுல்லாசமாய்
வாழ்வோம் சந்தோஷமாய்

வள்: போதும் போதும் போடா
நீ என்மேல் ஆசைகொண்டு வார்த்தைகளைச் சொல்லாதே

வே: சுந்தரி நீ சொல்வது சரியோ

வள்: செல்லாதுன் ஜாலம் நில்லாதே சென்று வா

வே: ஏது என்போல் ஏற்ற நாயகன் எங்கும் நீ காண்பதில்லை
காரிகையே நீ கண்பார் எனையே காதற் கனி ரசமே

வள்: ஆத்திரக்காரா ஆண்பிள்ளையா நீ

வே: தேடிவந்த பாக்கியத்தைத் தள்ளாதே

வள்: வாது செய்யாதே தீது றுவாயே மாதென்னுடனே இனிநீயே

சுப்: மாதர் மணியே மகிழ்வோம் நாமே

வள்: மூடா துன்மதி வேண்டாம்

வே: நீ இன்றே நல் இன்பம் கொள் மானே
சினம் கொள்ள லாகுமா நாமும் உல்லாசமா
வாழ்வோம் சந்தோஷமாய்

வேடன்] [செஞ்சுருட்டி-ஆதி

வண்ணத் தாமரையைக் கண்டு வாயில்
மதுர ராகம் பாடிக்கொண்டு
மதிமயங்கி பேடையுடன் முயங்கியே
கிடக்கும் வண்டு தேனை யுண்டு

வள்ளி] [ஹிந்துஸ்தான் மேட்டு-ஆதி

ஆலோலம ஆலோலம் ஆலோலம் சோ சோ சோ
அரத்திலே கூண்டுகட்டும் தூக்கணாங் குருவிகளே நேரில் வராதீர்
திண்ணமாய் தேடி இங்கே தினையே தின்றிட நினையாதீர்
தினைப்புனம் தன்னில் வந்தால் திரும்பிடமாட்டீரே
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் சோ சோ சோ

வேடன்] [பிலஹரி-ஆதி

ஆயலோட்டும் பெண்ணே
ஆவியே என் ஆருயிர் சஞ்சீவியே மன்மதனென்னும்
பாவியே மலர் கணையைத் தூவியே வாட்டுரான் கண்ணே

கிழவன்] [ஹிந்துஸ்தானி மேட்டு-ஆதி

மாய வாழ்விலே நீ யேன் மயங்கினாய்
மாய்ந்தே மறைந்திடும் காண்பது எல்லாம்
தாயோடு தாரமும் தனமுதல் நிலையன்று நேயமாய் அவனருள்
தேடு என்றும்
வானிலே உலவும் ஆதவன் மாமதிதானே சுடர்பெற்று சஞ்சாரமே
செய்திடவே அருள் தந்தவனை சிந்தையிலே நிதம் நீயே நினை

கிழவன்—வள்ளி] [செஞ்சுருட்டி-திச்ரலகு

கிழ: தாகம் தீர்ந்த தல்லால் அன்னமே - இப்போ
மோகம் பிறந்தது சொர்ணமே - எனை
சேர்ந்து அணைத்தொரு முத்தமே - தந்தால்
சிந்தை மகிழ்வேன் நான் நித்தமே

வள்: மூப்படைந்த உடல் தளர்ந்து முது கிழமான உன்றன்
மூளை கெட்டுப் போச்சுதடா கிழவா
முன்னே வந்து நில்லாதேடா

கிழ: கொஞ்சுமொழி கோதையே நீ கோபம்கொள்வ தாகாதடி
கெஞ்சுகிறேன் என்று சொல்லி கேவலமாய்
எண்ணாதே என் மாதே - உன்
நெஞ்சம் இளகி நேசிப்பாய் இப்போதே

வள்: மோசக்கார வேஷங் கொண்ட மூடக்கிழவா போடா
மீசை நரைச்சுப் போச்சே ரோசம் இல்லையோ சீ சீ

கிழ: மீசை நரைச்சாலென்ன பெண்ணே மேனிவெளித்தா
ஆசை நரைக்கவில்லை எந்தன் ஆவல் பெருகுதடி [லென்ன

கிழவன்[ [கமாஸ்-ஆதி

நாத்ருததீம் தீம் தனம் தீம் தான ஸமநமா-பாத நீ-ஸநிதபம
தீம்தீம் தான ததீமி தகிட தித்லாம் கிடதோம்
த்லாம் கிடதோம்-த திங்கிணதோம்
வானவர்கள் போற்றிட மான் மழு வேந்திய
கால் மாறி யாடிய கங்கை யணிந்தவர் ஆனந்தமாக ஆடினார்
தாம் ரிஸக் தக்த தள ஜுணு தாம்
ஸமக தஜணு பஸக்தண ஜுணு
ஸகமக தணஜுணு பமக தகிட தலாம் தகிட
ஸநீதம ததீங்கிண தோம்

கிழவன்] [மோகனம்-ஆதி

வாராய் தேவாதி தேவனே நீவா கஜமுக விநாயக காவா
நான் உனது பாதமே தானுரை செய்தே கூவினேன்
மூவாதி முதல்வ சுபத ஸுவரித பராத்பரா
தயை செய்வாய் சகோதரா மெய்
ஞான வரதனே உயர் மோன சுமுகனே
சுஜன பாவனனே பாரெனையே
இது போதினிலே அருள் தா (வாராய்)

வள்ளி] [மாண்ட்-ஏகதாளம்

ஏச்சு விட்டேனே தாத்தா ஏச்சு விட்டேனே வள்ளி
ஏச்சு விட்டேனே ஏச்சு

கிழவன்] [மாண்ட்-ஏகதாளம்

ஆஹா வள்ளி ஏச்சு விட்டேனே
ஏச்சு விட்டேனே உன்னை ஏச்சுவிட்டேனே ஏ-ஏ-ஏ
வள்ளி உன்னை ஏச்சு விட்டேனே தாத்தா ஏச்சுவிட்டேனே (ஏ)

சுப்பிரமணியர்—வள்ளி] [ஹிந்துஸ்தானி மெட்டு-ஆதி

சுப்: ப்ரேமை யலதே பாரின் மீதே பாக்யம் வேறேதே
ப்ரேமை தானோர் உருவாய் உனையே ப்ரியே
இங்கடைந்தேன் நானே

வள்: ப்ரேமா ரூபமே என்றென்னை புகழ்ந்தால் பதியே தானதன்
இன்பரூபமே

சுப்: சந்திர பிம்பமே ஸரஸாங்கியே என் ஸாரஸ நயனீ

வள்: என தாருயிரே ப்ராண நாயகர் நீரன்றோ

சுப்: மங்கையே நீ என் மானஸ தேவி

வள்: மங்களாகர மன்மத ரூபா

சுப்: ஏகபோக சுகமே நாடி

இருவரும்: இன்பமதாய் இருப்போமே நாமே
ப்ரேமை யலதே பாரின் மீதே பாக்யம் வேறேதே
ப்ரேமை தானோர் உருவாகினமே மனம் மகிழ்ந்தோம் நாமே

ராகமாலிகை] வள்ளி [ஷண்முகப்பிரிய-ஆதி

சிந்தை யறிந்து வாடி-செல்வக் குமரன்
செந்தூரிடந் தங்கும் கொந்தாள் மலர் கந்தன்
அந்தோ என் ஆசையெல்லாம் கொள்ளை கொண்டானே
ஆறுமுக வடிவேலன்—சிவபாலன்

[சுருட்டி]

சின்னஞ் சிறுவயதில் என்னை மாலையிட்டானே
சிரிக்கச் சிரிக்கப் பேசி கைவளையல் தொட்டானே
அன்னம் பாலும் வெறுக்க அவனியில் கைவிட்டானே
அடிமை பெண்டீரென்றே முடிய மறந்திட்டானே

[காபி]

கட்டித் தொட்டுமே இதழ் கனியமுதம் குடித்தான்
கலவி மதனைப்போல குலவி முத்தங் கொடுத்தான்
எட்டுக் குடிவேலவன் இசையமுதம் படித்தான்
என்றும் பிரியேன் என்று என் கைமேலடித்தான் (சிங்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

# கலைஞர். கருணாநிதியின்

## அரிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| பலிபீடம் நோக்கி | ... | 1 | 0 |
| இன முழக்கம் | ... | 1 | 0 |
| இரத்தச்சுவடு | ... | 1 | 0 |
| புராணப் போதை | ... | 1 | 0 |
| தூக்குமேடை | ... | 1 | 8 |
| நச்சுக்கோப்பை | ... | 0 | 12 |
| வாழமுடியாதவர்கள் | ... | 0 | 12 |
| பெரிய இடத்துப் பெண் | ... | 0 | 8 |
| தப்பிவிட்டார்கள் | ... | 0 | 6 |
| கொலைக்களம் | ... | 0 | 8 |

ஊடுருவி தீட்டியவை:-

| | | | |
|---|---|---|---|
| நெப்போலியன் | | 1 | 0 |
| தொழிலாளர் | [மார்ஜினி] | 1 | 0 |
| அரசாங்கம் | [லெனின்] | 1 | 0 |
| மாஜி கடவுள்கள் | | 1 | 0 |
| சீனத்துச்சிங்கம் | [சன்யாட்சன்] | 1 | 0 |
| கலிங்கப் போர் | [அசோகன்] | 1 | 0 |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | | 1 | 0 |
| ஒளி விளக்குகள் | | 1 | 0 |
| வீரமங்கை ஜோன் | | 1 | 0 |
| ரஸ்புடீன் | | 0 | 8 |
| ரோமியோ ஜூலியத் | [ஷேக்ஸ்பியர்] | 1 | 0 |
| லைலாமஜ்னு | | 1 | 0 |
| நானா | [எமிலிஜோலா] | 1 | 0 |

கலைமன்றம்

தபாற் பெட்டி நெ. 275 • சென்னை—1

## அறிஞர்களின் அமுதத் துளிகள்

| | | |
|---|---|---|
| தாகூர் முத்துக் குவியல் | 0 | 8 |
| லெனின் பொன் மொழிகள் | 0 | 8 |
| இங்கர்சால் அறிவுரைகள் | 0 | 8 |
| விவேகானந்தர் வீர வுரைகள் | 0 | 8 |
| இராமகிருஷ்ணர் அருள் மொழிகள் | 0 | 8 |
| ஏசுநாதர் அருள் வாக்குகள் | 0 | 8 |
| கம்பர் சற்பனைகள் | 0 | 8 |
| கீதை உபதேச மொழிகள் | 0 | 8 |
| ஷேக்ஸ்பியர் வர்ணனைகள் | 0 | 8 |
| ஸ்டாலின் புரட்சி மொழிகள் | 0 | 8 |
| வள்ளலார் வாய் மொழிகள் | 0 | 8 |
| அண்ணாவின் உவமைகள் | 0 | 8 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | 0 | 8 |
| திருக்குறள் | 0 | 8 |
| மாஜினி மணி மொழிகள் | 0 | 8 |

**கலை மன்றம்**

**சென்னை-1**